4th August 1966]

திரு. ஆ. தங்கவேலு : மேஸ்திரிகளைத் தவிர மற்ற தொழிலாளர்கள் யாரும் அகவிலைப்படி பெறுவதற்கு உரிமையில்லை என்றூர்கள். இருக்கக்கூடிய நிலையை உத்தேசித்து, அரசாங்கம் இதை மீண்டும் பரிசிலனை செய்து எல்லாத் தொழிலாளர்களுக்கும் அகவிலைப்படி வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : வீடூர் நீர்த்தேக்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டும் இல்லை. இதே நிலையில் இருக்கும் மற்றர்களுடைய நிலைமையையும் கூட அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டுதான் இருக்கிறது.

*** 78 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடூர் நீர்த்தேக்கத்தின் கீழுள்ள வீடூர், சிறுவை ஆயக் கட்டுகளுக்கு 10 சதவிகிதம் அதிகப்படி வரி விதித்து 3 ஆண்டு களுக்குச் சேர்ந்து வரி கட்டும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படுவதை ஒட்டி, வீடூர் நீர்ப்பாசனக் குழுத்தலைவர் அவர்களால் 27—1—1966-ல் கனம் உணவு அமைச்சர் அவர்களிடம் மனு ஒன்று கொடுக்கப் பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) அந்த வேண்டுகோளை அரசாங்கம் பரிசிலனை செய்தது. வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் உள்ள நிலங்களுக்கு, தமிழ் நாடு 1963-ம் ஆண்டு கூடுதல் நிலவரி கூடுதல் பாசனத் தீர்வைச் சட்டத்தின் கீழ், கூடுதல் நிலவரியும், கூடுதல் பாசனத் தீர்வையும் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதென ஏற்கெனவே முடிவு செய்ததை விரைந்து செயல்படுத்துவதே போதுமானது என்று அரசாங்கம் கருதியது. மேற்படிச் சட்டம் வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்குப் பொருந்துவதிலிருந்து விலக்களித்து அறிவிப்பு வெளியிடப்படும்வரை, மேற்படிச் சட்டத்தின் கீழ் கூடுதல் நிலவரியும், கூடுதல் பாசனத் தீர்வையும் வசூலிப்பதை நிறுத்தி வைக்கும்படி தென் ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் கேட்டுக் கொள்ளப்பட்டார். வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மேற்படி சட்டத்திலிருந்து விலக்களித்து அரசாங்கம் இப்போது அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த வீடூர் நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டில் பலன் அடைந்தவர்கள் தீர்வை கட்டுவதில் நியாயம் இருக்கிறது. ஆனல், பலன் அடையாமலே இருக்கக்கூடியவர்களுக்கு, தண்ணீர் பாயாமல் உள்ள நிலங்களுக்குத் தீர்வையை நிறுத்தி வைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இதுவரைக்கும் அப்படிப் பலன் 9-00 a.m.

[4th August 1966

அடையாதவர்களைக் கசக்கிப் பிழிந்து வசூல் செய்ததைத் திருப்பிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியெடுத்துக் கொள்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் சொன்ன விவரப்படி வசூல் செய்வது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதைப்பற்றி விவரங்கள் கொடுத்தால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஆ. தங்கவேலு : இந்த விலக்கு அளிக்கப்படுவது எந்தத் தேதியிலிருந்து கொடுக்கப்படும் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

மணிமுத்தாறு அபிவிருத்தி வரி

* 79 கேள்வி—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில், மணிமுத்தாறு அபிவிருத்தி வரி விதிக்கத் திட்டமிருக்கிறதா ?

(இ) எந்த அடிப்படையில் விதிக்க உத்தேசிக்கப்படுகிறது ?

(உ) வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று அந்த ஜில்லா சட்டசபை மெம்பர்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் காங்கிரஸ் ஸ்தாபனங்களிலிருந்தும் முறையீடுகள் வந்திருக்கின்றனவா ?

(எ) அவற்றின் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The betterment tax is levied according to the provisions of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955, as amended by Act 32 of 1963. According to the provisions contained in the Act, the entire ayacut under the Tambraparani delta and also the ayacut lands under Manimuthar Main Canal in Ambasamudram, Tirunelveli, Nanguneri, Srivaikuntam and Tiruchendur taluks are classified as improved old ayacut. The rate of contribution per acre will be Rs. 50 collectable in ten annual instalments of Rs. 5 per acre.

(*c*) & (*d*) Yes. The Member was already informed that the collection of betterment tax has not been started and that the question of postponement of betterment tax does not therefore arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அமைச்சர் அவர்கள் முன்பு அளித்த பதிலைப் பற்றித்தான் இப்பொழுது தெரிவித்தார்கள். ஆனால் இந்த மாதத்தில் பெட்டர்மென்ட் டாக்ஸ் வசூல் செய்வதற்கு